Previous Date of examination : 03.09.2020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ.சா. 64 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | வயது | 30/2022 |
| தகப்பனார் பெயர் | கணேசன் | ஜாதி | |
| தொழில் | கேட்டீன் வேலை | மதம் | |
| ஊர் | தஞ்சாவூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது தஞ்சாவூரில் வசித்துக்கொண்டு ரயில்வே கேட்டீனில் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 13.04.2019 ம் தேதி நான் எனது நண்பருடன் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு வந்திருந்தபோது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை போலிசார் விசாரித்தார்கள். அப்போது கோர்ட்டில் வேலை வாங்கி கொடுப்பதாக சொல்லி பணம் வாங்கிய விபரத்தை அவர் போலிசாரிடம் சொன்னார். அதனை போலிசார் பதிவு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து கையெழுத்து வாங்கினார்கள். அதில் நானும் எனது நண்பர் கலையரசனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அதன் பிறகு 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியின் வீட்டிற்கு போலிசார் அவரை அழைத்து சென்றார்கள். அப்போது காலை 10.30 மணி இருக்கும். அங்கு அவரது வீட்டில் இருந்து ரெசியூம் மற்றும் டையரி ஆகியவற்றை அவரிடமிருந்து போலிசார் கைப்பற்றினார்கள். அதற்கும் சாட்சியாக நானும், எனது நண்பர் கலையரசனும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணம் கைப்பற்றியதற்காக தயார் செய்யப்பட்ட மகசர்தான் என்னிடம் காட்டப்படுவதாகும். ( **கைப்பற்றுதல் மகசர்**

**அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7 நபர்களின் ரிசியூம் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அதன் முன்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள பெயர் விபரங்கள் அடங்கிய சீட்டு ஆகியவை அ.சா.ஆ. 14 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. டையரி அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசாரிடம் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி கூறிய விபரத்தைதான் பதிவு செய்தார்கள். அதனை படித்து பார்த்துதான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விபரங்களை முழுமையாக சொல்லமுடியாது. நீண்ட நாட்களாகிவிட்டது. வேலை வாங்கி தருவதற்கு பணம் வாங்கியிருப்பதாக 2 வது எதிரி சொன்னார். அது சம்பந்தான ஆவணங்கள் இருப்பதாகவும் சொன்னார். அதற்காக போலிசார் அங்கு அழைத்து சென்றார்கள். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**(1)** போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. அவர் சொன்ன விபரங்களை பதிவு செய்தார்கள், அதனை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். என்னுடன் கையெழுத்து போட்ட கலையரசன் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. 2 வது எதிரியின் வீட்டிற்கு காலை 10.30 மணிக்கு போனோம். 2 வது எதிரியின் வீடு எனக்கு ஏற்கனவே தெரியும். அவரின் வீட்டிற்கு அருகில்தான் எனது நண்பர் வீடு இருக்கிறது. 2 வது எதிரியிடமிருந்து ஆவணங்களை கைப்பற்றும்போது இன்ஸ்பெக்டர் மற்றும் போலிசாரும் இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் ஞாபகம் இல்லை. ஆவணங்கள் என்ன இருந்தது என்றால் ரிசியூம் 8 நபர்களுடையதும், ஒரு டையரியும் இருந்தது. அதனை படித்து பார்த்தேன் என்றால் படித்து பார்த்தேன்.

**(2)** 2 வது எதிரி ஆவணங்களை எடுத்து ஒப்படைக்கும்போது வெளி நபர்கள் யாரும் இருந்தார்களா என்றால் நாங்களும், போலிசாரும் இருந்தோம். வெளிநபர்கள் இல்லை. 2 வது எதிரி சொன்ன விஷயங்களை டைப் செய்து அதன் பின்னர்தான் கையெழுத்து வாங்கினார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் காலத்தில் ரயில்வே கேட்டினில்தான் வேலை செய்தேன்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(1) 2 வது எதிரி குடியிருந்த வீட்டிற்கு நான் போலிசாருடன் போனதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல 2 வது எதிரி அந்த வீட்டில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் போவதற்கு முன்பே 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி டி.சி.பி. அலுவலகத்தில் இருந்தாரா என்றால் சரியல்ல. நாங்கள் போனபின்னர்தான் வந்தார். நான் சொல்வது பொய் என்றும், 2 வது எதிரி நாங்கள் செல்வதற்கு முன்பே டி.சி.பி. அலுவலகத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. 2 வது எதிரியை எங்கு வைத்து கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். 2 வது எதிரி போலிசார் விசாரித்தபோது 2 வது எதிரி பதற்றமான மனநிலையில் இருந்தாரா என்றால் பதில் சொல்லிக்கொண்டு இருந்தார். என்ன மனநிலையில் இருந்தார் என்று சொல்லமுடியாது. 2 வது எதிரி என்ன மனநிலையில்இருந்தார் என்று சொல்லமுடியும் என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி எனக்கு முன்,பின் அறிமுகம் இல்லாதவர் என்றால் சரியல்ல. அவரை எனக்கு ஏற்கனவே தெரியும். நான் பொய்யாக 2 வது எதிரியை தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(2) சாட்சி கலையரசன் எனது உறவினரா என்றால் நண்பர் ஆவார். அவர் மீது திருவாரூர் மாவட்ட காவல் துறையில் பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. நான் எதற்காக டி.சி.பி. அலுவலகத்திற்கு போனேன் என்றால் எனது நண்பர் நவீன் என்பவர் போன் செய்ததால் நான் அங்கு போனேன். நவீனும் டி.சி.பி. அலுவலகத்திற்கு வந்தாரா என்றால் வந்தார். நாங்கள் சென்றவுடன் அவர் போய்விட்டார். அவரை போலிசார் அன்று விசாரித்தாரா என்று எனக்கு தெரியவில்லை. நானும், கலையரசனும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு, நவீன் அழைத்ததால் சென்றதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையின் உதவி எனக்கு தேவைப்பட்டதால் 2 வது எதிரி எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், சான்று பொருட்களை எடுத்து ஆஜர் செய்ததாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் எந்தெந்த இடத்தில் ஆவணங்கள் இருந்து எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் 2 வது எதிரி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான்.

(3) 2 வது எதிரி குடியிருந்த வீடு கிழக்கு பக்கம் பார்த்த வீடாகும். அந்த விபரம் கைப்பற்றுதல் மகசரில் இல்லை என்றால் சரிதான். அந்த இடம் குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். நாங்கள் போனதாக சொல்லும் நேரத்தில் அங்கம், பக்கத்தினர் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். நான் சொல்வதுபோல 2 வது எதிரி நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எனது முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், ஆவணங்கள் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது முன்னிலையில் ஆவணங்கள் எதுவும் எடுத்து ஆஜர்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல 2 வது எதிரி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொல்லி பணம் வாங்கியதாக ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.